14.6.07

செ.வெ. எண்: 358

# பத்திரிக்கை செய்தி

ஜவஹர்லால் நேரு தேசீய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் மாநில அளவிலான மூன்றாவது ஒப்பளிப்புக் கூட்டம் இன்று (14.06.2007) முற்பகல் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்ட முக்கிய திட்டங்களுக்கு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன.

1. கோவை மாநகராட்சிக்கு ரூபாய் 443.64 கோடி பாதாள சாக்கடைத் திட்டம்.

2. போரூர் பேரூராட்சிக்கு ரூபாய் 30 கோடியில் பாதாள சாக்கடைத் திட்டம்.

3. உள்ளகரம் – புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு ரூபாய் 18 கோடியே 25 இலட்சத்தில் குடிநீர் வழங்கல் திட்டம்.

4. திருவேற்காடு 3ம் நிலை நகராட்சிக்கு ரூபாய் 31 கோடியே 84 இலட்சத்தில் குடிநீர் வழங்கல் திட்டம்.

5. சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மற்றும் நீர்வழிக் கால்வாய்கள் மேம்படுத்த ரூபாய் 750 கோடிக்குத் திட்டம்.

6. சென்னையில் குடிசை வாழ் மக்களுக்கான அடிப்படை வசதிகள் ரூபாய் 121 கோடியில் மேம்படுத்தும் திட்டம்

மேற்கண்ட ரூபாய் 1,364.73 கோடி மதிப்பிலான 6 திட்டங்களுக்கும் மத்திய அரசின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்திட இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நிதித்துறைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை செயலர், நெடுஞ்சாலைத் துறை செயலர், டுபிட்கோ நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், நகராட்சி நிர்வாக இணை ஆணையர், த.கு.வ.வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செ.ம.தொ.துறை, சென்னை-9.